# 70 ஆவது ஆண்டு ஸ்கந்த ஷஷ்டிப் பெருவிழா அழைப்பிதழ்

**13-11-2023 திங்கள் முதல் 21-11-2023 செவ்வாய் முடிய**



**விழா நடைபெறும் இடம்:**
**NKT முத்து ஹால்,**
**4, TP கோயில் 2ஆவது சந்து,**
**ஐஸ் ஹவுஸ், திருவல்லிக்கேணி,**
**சென்னை-600005**

## சிறப்பு நிகழ்ச்சிகள்

- ஆறுமுக லக்ஷார்ச்சனை / த்ரிசதி
- மஹா ருத்ரம்
- சொற்பொழிவு
- அருணகிரிநாதர் விழா
- ஷஷ்டி விழா மலர் வெளியீடு
- ஸ்கந்த ஷஷ்டிப் பெருவிழா
- தேவசேனா வள்ளி கல்யாணம்
- விடையாற்றி உற்சவம்




சம்பைக் கொடி இடை விபுதையின் அழகுமு(ன்)
நந்த திருநடம் இடுசரண் அழகு உற
சந்தச் சபைதனில் எனது உளம் உருகவும் வருவாயே!

## முருகன் திருவருட் சங்கம்

101 /50, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600005.
தொலை பேசி : 044-2854 4713

# 70ஆவது ஆண்டு ஸ்கந்த ஷஷ்டிப் பெருவிழா



## சிறப்பு நிகழ்ச்சிகள்

- ஆறுமுக லக்ஷார்ச்சனை / த்ரிசதி
- மஹா ருத்ரம்
- சொற்பொழிவு
- அருணகிரிநாதர் விழா
- ஸ்கந்த ஷஷ்டிப் பெருவிழா
- மலர் வெளியீடு
- தேவசேனா வள்ளி கல்யாணம்
- விடையாற்றி உற்சவம்

13.11.2023 திங்கட்கிழமை முதல்
21.11.2023 செவ்வாய்க்கிழமை முடிய

**விழா நடைபெறும் இடம்:**

## N.K.T. முத்து ஹால்

4, T.P. கோயில் 2ஆவது சந்து, ஐஸ்ஹவுஸ்,
திருவல்லிக்கேணி, சென்னை-600 005.
கைப்பேசி: **98417 38069**

**முருகன் திருவருட் சங்கம்**
101/50, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-600 005.

## நிகழ்ச்சி நிரல்

**13.11.2023** திங்கட்கிழமை முதல் **18.11.2023** சனிக்கிழமை முடிய ஆறு தினங்கள் காலையில் **7.00** மணி முதல் பிற்பகல் வரை **ஸ்ரீ வள்ளி தேவசேனா ஸமேத ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய சுவாமிக்கு** அபிஷேக ஆராதனை களுடன் ஈசானம், **தத்புருஷம், அகோரம், வாமதேவம், ஸத்யோஜாதம், அதோமுகம்** ஆகிய ஆறுமுகங்களுக்குரிய லக்ஷார்ச்சனைகளும் **18.11.2023 ''மஹா ஸ்கந்த ஷஷ்டி''** அன்று காலை ஏகாதச ருத்ர ஜபமும், மஹாருத்ர ஹோமமும், கலசாபிஷேகமும், குமாரபோஜனமும், அன்னதானமும் அன்று மாலை திருப்புகழ் இன்னிசையைத் தொடர்ந்து த்ரிசதி அர்ச்சனையும் **13.11.2023** முதல் **19.11.2023** முடிய அனைத்து நாட்களிலும் மாலையில் சொற்பொழிவுகளும், **17.11.2023** அன்று காலை சங்கத்தின் ஸ்ரீ அருணகிரிநாதர் விழாவும், மாலையில் ஷஷ்டி விழா மலர் வெளியீடும், **19.11.2023** ஞாயிறு அன்று காலை சூரிய நமஸ்காரத்தினைத் தொடர்ந்து அஷ்டபதி மற்றும் திருப்புகழில் **''ஸ்ரீ தேவசேனா வள்ளி கல்யாண வைபவமும்'' 20.11.2023, 21.11.2023** தேதிகளில் நிகழ்ச்சி நிரலில் கண்ட வண்ணம் திருப்புகழ் இன்னிசை நிகழ்ச்சிகளும் நடைபெற உள்ளன.

அன்பர்கள் யாவரும் சங்கத்தின் சார்பில் நடைபெற உள்ள இந்த 70ஆவது ஆண்டின் ஸ்கந்த ஷஷ்டி பெருவிழா நிகழ்ச்சிகளில் குடும்பத்துடன் கலந்து கொண்டு, **தங்களால் இயன்ற அளவு அரிசி, பருப்பு மற்றும் பொருளுதவிகளை தாராளமாக மனமுவந்து அளித்து**, விழா நிகழ்ச்சிகள் செவ்வனே நடைபெறுவதற்குத் தங்கள் மேலான பேராதரவினை நல்கி, ஸ்ரீ வள்ளி தேவசேனா ஸமேத ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய சுவாமியின் திருவருளுக்குப் பாத்திரமாகி, அவனருளால் வாழ்க்கையில் எல்லா நலன்களையும், வளங்களையும் அடையப் பெற்று இகபர சௌபாக்கியத்துடன் வாழ முருகன் திருவருட் சங்கம் பிரார்த்திக்கின்றது.

இப்படிக்கு

**முருகன் திருவருட் சங்கத்தார்**

தஞ்சம் தஞ்சம் சிறியேன் மதி
கொஞ்சம் கொஞ்சம் துரையே அருள்
தந்துஎன்று இன்பம் தருவீடு அது தருவாயே

(வஞ்சங் கொண்டு - திருச்செந்தூர்த் திருப்புகழ்)

## 13.11.2023 திங்கட்கிழமை

### 1. (வீரவாகுத் தேவர் நாள் நவவீரர்கள்)

சூரவாகுலம் ஒழிந்துநற் சுரர்முதற் பலரும்
ஆரவாகுறு வாழ்வுறப் பரம்பரன் அருளால்
ஏரவாகுறு மாணிக்கம் எனுமினாள் பயந்த
**வீரவாகு**வின் விரைமலர்ச் சேவடி பணிவாம்

(சேய்த்தொண்டர் புராணம்)

| | | |
|---|---|---|
| காலை | 09.00 மணி | **கணபதி ஹோமம்** |
| காலை<br>பிற்பகல் | 10.30 மணி முதல்<br>02.00 மணி வரை | **ஸ்ரீ ருத்ர பாராயணத்துடன் முருகப் பெருமானுக்கு அபிஷேக ஆராதனை தொடர்ந்து ஈசானமுக (மேல் நோக்குதல்) ஸஹஸ்ரநாம அர்ச்சனை** |
| மாலை | 03.00 மணி | **கலசஸ்தாபனம்** |
| மாலை<br>மாலை | 04.00 மணி முதல்<br>06.00 மணி வரை | **ஸ்ரீ மஹா ருத்ர பாராயணம்** |
| மாலை<br>இரவு | 06.30 மணி முதல்<br>08.00 மணி வரை | **சொற்பொழிவு**<br>**ஸ்கந்த புராணத்தில் சரித்திர ஸம்பவங்கள்**<br>**வேதசூடாமணி, ஸலக்ஷண வித்வான் நன்னிலம் ப்ரும்மஸ்ரீ இரா. ஸ்ரீகிருஷ்ண கனபாடிகள்** அவர்கள்<br>ஆசிரியர்: **வைதீகஸ்ரீ** (S/o. ஸ்ரீ V. Rajagopalan) |

அடியேன் உமக்கே அடைக்கலம், அடைக்கலம்
சிறியேனுடைய அறிவு மிகவும் அற்பம் அற்பம் ஆதலால்
துரையே! அருள்பாலித்து இன்பத்தைத் தருகின்ற
மோக்ஷ வீட்டை அடியேனுக்குத் தந்தருள்வாய்.

கொங்கு(அ)டம்பு கொங்கு பொங்கு
பைங் கடம்பு தண்டை கொஞ்சு
செம்சதங்கை தங்கு பங்க யங்கள்தாராய்

(வந்து வந்து - திருச்செந்தூர்த் திருப்புகழ்)

## 14.08.2023 செவ்வாய்க்கிழமை

## உ. வீரகேசரித் தேவர் நாள்

கோரகேசரி முகன் முதல் அசுரராம் கொடியோர்
சேரகேடுற மதிமுடிச் செழுஞ்சுடர் அருளால்
மார கேதன மணிவிழித் தரளமான் பயந்த
**வீரகேசரி** விரைமலர்ச் சேவடி பணிவாம்

(சேய்த்தொண்டர் புராணம்)

| | | |
|---|---|---|
| காலை 07.30 மணி முதல்<br>பிற்பகல் 12.30 மணி வரை | | **ஸ்ரீ மஹா ருத்ர பாராயணத்துடன் முருகப் பெருமானுக்கு அபிஷேக ஆராதனை தொடர்ந்து பூர்வ தத் புருஷமுக (கிழக்கு நோக்குதல்) ஸஹஸ்ரநாம அர்ச்சனை** |
| மாலை 04.00 மணி முதல்<br>மாலை 06.00 மணி வரை | | **ஸ்ரீ மஹா ருத்ர பாராயணம்** |
| மாலை 06.30 மணி முதல்<br>இரவு 08.00 மணி வரை | | **சொற்பொழிவு ஸ்கந்த புராணத்தில் சரித்திர ஸம்பவங்கள்**<br>**வேதசூடாமணி, ஸலக்ஷண வித்வான் நன்னிலம் ப்ரும்மஸ்ரீ இரா. ஸ்ரீகிருஷ்ண கனபாடிகள்** அவர்கள்<br>ஆசிரியர்: **வைதீகஸ்ரீ** (S/o. ஸ்ரீ V. Rajagopalan) |

கோங்கு, அடம்பு என்னும் கொடிப்பூ, மணம் மிகுந்த கசிய கடம்பு, தண்டை, இனிமையாக ஒலிக்கின்ற செவ்விய சதங்கை, அழகு செய்கின்ற உன் பாத தாமரை மலர் போன்ற திருவடியைத் தந்து அருள்புரிவீர்.

புனிதம்இலி மாந்தர் தங்க(ள்)
புகழ் பகர்தல் நீங்கி நின்பொற்
புளகமலர் பூண்டு வந்தித் திடுவேனோ

(தகரநறை - திருச்செந்தூர்த் திருப்புகழ்)

## 15.11.2023 புதன்கிழமை

## 3. வீர மகேந்திரத் தேவர் நாள்

பாரமகேந் திரம் இரியப் படிற்றவுணர் குலம் ஒழியப்
பயந்தீர்ந் தின்பம், ஆரமகேந் திரன் அமரர் உயிர்வாழ
அறுமுகற்கோர் துணைவன்ஆகிச், சேரமகேந் திரம்
அணுகச் சிவன் அருளால் திகழ்பதும ராசிபெற்ற, வீர
**மகேந்திரன்** கமல பதமதனை நினைந்துவரு வினையை வெல்வாம்
(சேய்த்தொண்டர் புராணம்)


காலை 07.30 மணி முதல் பிற்பகல் 12.30 மணி வரை — ஸ்ரீ மஹா ருத்ர பாராயணத்துடன் முருகப் பெருமானுக்கு அபிஷேக ஆராதனை தொடர்ந்து தக்ஷிண
மகேந்திரன் கமல பதமதனை நினைந்துவரு வினையை வெல்வாம்
(சேய்த்தொண்டர் புராணம்)


| | |
|---|---|
| காலை 07.30 மணி முதல்<br>பிற்பகல் 12.30 மணி வரை | **ஸ்ரீ மஹா ருத்ர பாராயணத்துடன் முருகப் பெருமானுக்கு அபிஷேக ஆராதனை தொடர்ந்து தக்ஷிண (தெற்கு நோக்குதல்) அகோரமுக ஸஹஸ்ரநாம அர்ச்சனை** |
| மாலை 04.00 மணி முதல்<br>மாலை 06.00 மணி வரை | **ஸ்ரீ மஹா ருத்ர பாராயணம்** |
| மாலை 06.30 மணி முதல்<br>இரவு 08.00 மணி வரை | **சொற்பொழிவு ஸ்கந்த புராணத்தில் உள்ள சரித்திர ஸம்பவங்கள்**<br>**வேதசூடாமணி, ஸலக்ஷண வித்வான் ப்ரும்மஸ்ரீ இரா. ஸ்ரீகிருஷ்ண கனபாடிகள்** அவர்கள்<br>ஆசிரியர்: **வைதீகஸ்ரீ** (S/o. ஸ்ரீ V. Rajagopalan) |

தூய்மை இல்லாத மனிதர்களிடம் போய், அவர்களைப் புகழ்ந்து பேசுவதை விடுத்து, இன்பம் தரும் அழகுடைய உன் பாத மலரைச் சிந்தையிலும் சென்னியிலும் தரித்துப் புகழ்ந்து துதிக்கமாட்டேனோ?

இன்பம் தந்து உம்பர் தொழும்பத
கஞ்ச(ம்) தம் தஞ்சம் எனும் படி
என்றென்றும் தொண்டு செயும்படி அருள்வாயே

(துன்பங்கொண் - திருச்செந்தூர்த் திருப்புகழ்)

## 16.11.2023 வியாழக்கிழமை

## 4. வீர மகேச்வரத் தேவர் நாள்

வெந்திறலார் அவுணர்எலாம் வீறழிந்து நீறுபட விபுதர்
வாழ, வந்தருளும் வேற்றுடக்கை மாமுருகற் கொருதுணை
யாய் மணியார் கண்டத் தெந்தைபிரான் திருவருளால்
கோமேத மாமணியாம் எழில் மடந்தை, தந்தருளும்
**வீரமகே சுரன்**கமல பதமதனைச் சரணம் செய்வாம்.

(சேய்த்தொண்டர் புராணம்)

| | | |
|---|---|---|
| காலை 07.30 மணி முதல்<br>பிற்பகல் 12.30 மணி வரை | } | **ஸ்ரீ மஹா ருத்ர பாராயணத்துடன் முருகப் பெருமானுக்கு அபிஷேக ஆராதனை தொடர்ந்து உத்தர (வடக்கு நோக்குதல்) வாமதேவமுக ஸஹஸ்ர நாம அர்ச்சனை** |
| மாலை 04.00 மணி முதல்<br>மாலை 06.00 மணி வரை | } | **ஸ்ரீ மஹா ருத்ர பாராயணம்** |
| மாலை 06.30 மணி முதல்<br>இரவு 08.00 மணி வரை | } | **சொற்பொழிவு**<br>**ஸ்கந்த புராணத்தில் உள்ள சரித்திர ஸம்பவங்கள்**<br>**வேதசூடாமணி, ஸலக்ஷண வித்வான் ப்ரும்மஸ்ரீ இரா. ஸ்ரீகிருஷ்ண கனபாடிகள்**<br>ஆசிரியர்: **வைதீகஸ்ரீ** (S/o. ஸ்ரீ V. Rajagopalan) |

இன்பத்தைத் தந்து தேவர்கள் பணிகின்ற உமது பாதத் தாமரையே நமது புகலிடம் என்று நினைத்து, எந்த நாளும் உமக்கு தொண்டு செய்யுமாறு அருள்புரிவீர்.

இசைக்கும் செந்தமிழ் கொண்டு(அ)ங்(கு)
இரக்கும் புன்தொழில் பங்கம்
கெடத்துன்பம் கழித்து இன்பம் தருவாயே

(மனத்தின் - திருச்செந்தூர்த் திருப்புகழ்)

---

## 17.11.2023 வெள்ளிக்கிழமை

## 5. வீர புரந்தரத் தேவர் நாள்

சூராபுரம் துகளாகத் தொல் அவுணர் குல(ம்)
மாளத் துயர்தீர்ந் தின்பம், சேரபுரந் தரன் அமரர்
வாழவரு துணைவன் ஆகச், சேய்தனக்கோர் சோர
புரம் பொடித்தபிரான் அருளால்வை டூரியப்பைந்
தொடியாள் பெற்ற, **வீரபுரந் தரன்**கமல பதமதனை
வணங்கிவரு வினையை வெல்வாம்

(சேய்த்தொண்டர் புராணம்)

| | | |
|---|---|---|
| காலை 07.30 மணி முதல்<br>பிற்பகல் 12.30 மணி வரை | | **ஸ்ரீ மஹா ருத்ர பாராயணத்துடன் முருகப் பெருமானுக்கு அபிஷேக ஆராதனை தொடர்ந்து ஸத்யோஜாதமுக (மேற்கு நோக்குதல்) ஸஹஸ்ரநாம அர்ச்சனை** |
| காலை 07.30 மணி முதல்<br>மாலை 01.00 மணி வரை | | **ஸ்ரீ அருணகிரிநாதர் விழா திருப்புகழ் பஜனை வழிபாடு முருகன் திருவருட் சங்கத்தினர் (51 திருப்புகழ், அநுபூதி, அலங்காரம் மற்றும் திருவகுப்பிலிருந்து சில பாடல்கள்)** |
| மாலை 03.00 மணி முதல்<br>மாலை 05.00 மணி வரை | | **ஸ்ரீ மஹா ருத்ர பாராயணம்** |

---

புகழ் நிறைந்த செந்தமிழ் மொழியைக் கொண்டு பொருள் உள்ளவர்களிடம் போய் யாசிக்கும் இழிந்த தொழிற் குற்றம் நீங்க, என் துன்பத்தை ஒழித்து பேரின்பத்தைத் தந்து அருள்புரிவீர்.

ஸ்ரீ காரண காரிய லோக ப்ரபஞ்சச்
சோகம் எலா(ம்)அற வாழ்வுற நம்பில்
காசுஅறு வாரி மெய்ஞ்ஞான தவம் சற்று அருளாதோ?

(தோலொடு திருச்செந்தூர்த் திருப்புகழ்)

| | |
|---|---|
| மாலை 05.05 மணி முதல்<br>இரவு 07.05 மணி வரை | **ஷஷ்டி விழா மலர் வெளியீடு**<br>**திருப்புகழ்த் திரட்டு (Volume No. 1)** |
| இறைவணக்கம் | **ஸ்ரீமதி பவ்யா ஹரிசங்கர்** |
| வரவேற்புரை | **ஸ்ரீ N. சந்த்ரசேகர்** (Prop Creative Desk)<br>செயலர் முருகன் திருவருட்சங்கம் |
| துவக்க உரை | **திருப்புகழ் இசைவாணர்**<br>**ஸ்ரீ V. லக்ஷ்மி நாராயணன் A.M.I.E, M.S.,** |
| தலைமை உரை மற்றும்<br>மலரினை வெளியிடுபவர் | **வேத சூடாமணி, ஸலக்ஷண வித்வான்**<br>**நன்னிலம் ப்ரும்மஸ்ரீ இரா. ஸ்ரீகிருஷ்ண**<br>**கனபாடிகள்** அவர்கள்<br>ஆசிரியர்: **வைதீகஸ்ரீ** (S/o. ஸ்ரீ V. Rajagopalan) |
| சிறப்பு விருந்தினர்கள் | **Dr. ரேவதி அனந்த்**<br>M.D., D.G.O., Ph.D., F.I.A.M.S., F.I.C.O.G.<br>A.V. Hospital Sundarajan St, Chennai-18.<br>**சங்கீத வித்வான் ஸ்ரீமதி சாந்தி ஸுரேஷ்**<br>B.A. (Music) |
| மலரின் பிரதிகளை<br>வழங்குபவர் | **திருப்புகழ் இசைவாணர்**<br>**ஸ்ரீ V. லக்ஷ்மி நாராயணன்** A.M.I.E. M.S., |
| மலரினைப் பெறுநர்கள் | 1. **ஸ்ரீ ஸுப்ரஹ்மண்யன் S.** B.A. (Hons)<br>சென்னை-600 017<br>2. **ஸ்ரீ அனந்தகிருஷ்ணன் N.** பெங்களூரு<br>போஷகர் முருகன் திருவருட் சங்கம்<br>3. **ஸ்ரீ வேங்கடராமன் .V**<br>போஷகர் முருகன் திருவருட் சங்கம் |

ஸ்ரீ காரண காரியங்களால் வரும் இந்த உலக வாழ்க்கையின் துன்பங்கள் முழுவதும் அறவே நீங்கவும், இன்ப வாழ்வை அடையவும், விருப்பத்துடனே குற்றமற்ற கடல் போன்ற உண்மை ஞானத்தோடு கூடிய தவநிலையை அடியேனுக்கு உண்டாக உமது திருவருள் சிறிது அருள்புரியாதோ?

அண்ட கோளகை வெடிபட இடிபட
எண்திசாமுக(ம்) மடமட நடமிடும்
அந்த மோகர மயிலினில் இயலுடன் வரவேணும்

(பஞ்ச பாதக - திருச்செந்தூர்த் திருப்புகழ்)

4. **ஸ்ரீ ஸ்ரீதரன் S.** (Retd., MRF Ltd) சென்னை-28
5. **ஸ்ரீ கணேஷ்ராமன் M.** (Retd. Manager Quality Assurance DXE Tech, (Mridangam Artist) சென்னை-26
6. **ஸ்ரீ நாராயணன் V.P.** (Retd. Canara Bank) சென்னை-4
7. **ஸ்ரீ சண்முகம் N.** (Retd Amrutanjan) சென்னை-24
8. **ஸ்ரீ சங்கர ஸுப்ரஹ்மண்யன்** MRF சென்னை-4
9. **ஸ்ரீ இராமமூர்த்தி .V** (Retd, Port Trust) சென்னை-91
10. **ஸ்ரீ ஸ்ரீநிவாஸன் K.R.** (Retd SBI, சென்னை-18)
11. **ஸ்ரீ ஸுந்தர்** (Retd, SBI, சென்னை-17)
12. **ஸ்ரீ ராம்குமார் .R** M.Tech., Tirupathi
13. **ஸ்ரீ M. ஜெயகோபால்** (NKT முத்து ஹால், சென்னை-600 005 உரிமையாளர்)
14. **ஸ்ரீ விஸ்வநாதன் .N** B.E., (Senior Manager Project Division (Retd) ABB Ltd, Baroda)
15. **ஸ்ரீ வத்ஸன் .G** B.E., EEE Sr. Software Engineer Tiger Analytics
16. **ஸ்ரீமதி. பவ்யா ஹரிசங்கர்** சங்கீத விதுஷி
17. **ஸ்ரீமதி சிவப்ரியா**
18. **குமாரி வைஷ்ணவி லக்ஷ்மீ நாராயணன்**
19. **குமாரி சகுணா சந்த்ரசேகர்**
20. **குமாரி ஸ்ரீதன்யா சந்த்ரசேகர்**

இரவு 07.10 மணி முதல்
இரவு 08.40 மணி வரை

**சொற்பொழிவு**
**ஸ்கந்த புராணத்தில் சரித்திர ஸம்பவங்கள்**
**வேதசூடாமணி, ஸலக்ஷண வித்வான் ப்ரும்மஸ்ரீ இரா. ஸ்ரீ கிருஷ்ண கனபாடிகள்**
ஆசிரியர்: **வைதீகஸ்ரீ** (S/o. ஸ்ரீ V. Rajagopalan)

அண்ட கடாகங்கள் எல்லாம் அதிர்ச்சியில் பிளந்து போகவும், எட்டு திக்குகளும் மடமட என்னும் ஒலி உண்டாகுமாறு இடிந்து தூள் படவும், நடனம் புரியும் அந்த உக்கிரமான மயில் மீது எழுந்தருளி வந்து அருள்புரிய வேண்டும்.

வெகுகனக ஒளி குலவும் அந்தமன் செந்தில் என்(று)
(அ)விழ உளம் உருகிவரும் அன்புஇலன் தந்துஇலன்
விரவும் இருசிறு கமல பங்கயம் தந்து உகந்து அன்பு உறாதோ?

(கொடியனைய திருச்செந்தூர்த் திருப்புகழ்)

## 18.11.2023 சனிக்கிழமை

## 6. வீர ராக்கதத் தேவர் நாள்

கிலிதுறந்து புரந்தரன்வா னவர்வாழக் கிரிமுதலாய்
அவுணர் ஈட்டம், நலிவடைந்து நீறுபட வருகந்த
நாயகற்கோர் துணைவன் ஆகப்,பொலிவுறுநல் வயிர
மெனும் பூங்கொடியாள் பொருப்புவில்லி அருளாற்
பெற்ற, வலமிகுந்த புய**வீர ராக்கதன்**செங் கமலபத
வணக்கம் செய்வாம்

- சேய்த்தொண்டர் புராணம்

## மஹா ஸ்கந்த ஷஷ்டி விழா

| | |
|---|---|
| காலை 07.30 மணி முதல்<br>பிற்பகல் 01.00 மணி வரை | **முருகப் பெருமானுக்கு விசேஷ அபிஷேகம் ஸ்ரீ மஹா ருத்ர ஜபஹோமம் பூர்த்தி, கலசாபிஷேகம் தொடர்ந்து அதோமுக (கீழ்நோக்குதல்) ஸஹஸ்ரநாம அர்ச்சனை** |
| பிற்பகல் 01.30 மணி | **லக்ஷார்ச்சனை பூர்த்தி, குமார போஜனம் அன்னதானம்** |
| மாலை 03.30 மணி முதல்<br>மாலை 04.45 மணி வரை | **திருப்புகழ், பக்திப் பாடல்கள் இன்னிசை ஸ்ரீமதி கோமதி ஸ்ரீ குழுவினர்** |
| மாலை 05.00 மணி முதல்<br>இரவு 07.00 மணி வரை | **ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய த்ரிசதி அர்ச்சனை ஆறுவிதமான மலர்களுடன், ஆறுவித நிவேதனங்கள் படைப்பு** |

மிகுந்த பொற்பிரகாசம் வீசுவதும், அழகு நிலை பொருந்தியதுமான திருச்செந்தூர் என்று கூறி, நெஞ்சம் நெகிழ்ந்து உள்ளம் உருகி அத்திருத்தலத்தை தரிசிக்க வரும் அன்பில்லாதவனும், பிறருக்குத் தருமம் செய்ய இயல்பில்லாதவனுமாகிய எனக்கு சிவஞானம் பொருந்திய உமது இரண்டு இளமை பொருந்திய பாத மலர்களையும் விரும்பிக் கொடுத்து உன் திருவுள்ளம் அன்பு செய்யாதோ?

காயமு(ம்) நாவு(ம்) நெஞ்சு(ம்) ஓர்வழியாக அன்பு
காயம்விடாம(ல்) உன்றன் நீடிய தாள் நினைந்து
காணுதல் கூர் தவஞ்செய் யோகிகளாய் விளங்க அருள்வாயே

(பூரணவாரகும் திருச்செந்தூர்த் திருப்புகழ்)

---

| | | |
|---|---|---|
| இரவு 07.05 மணி முதல்<br>இரவு 08.35 மணி வரை | | **சொற்பொழிவு**<br>**ஸ்கந்த புராணத்தில் உள்ள சரித்திர ஸம்பவங்கள்**<br>**வேத சூடாமணி, ஸலக்ஷண வித்வான் ப்ரும்மஸ்ரீ இரா. ஸ்ரீ கிருஷ்ண கனபாடிகள்**<br>ஆசிரியர்: **வைதீகஸ்ரீ** (S/o. ஸ்ரீ V. Rajagopalan) |
| இரவு 08.45 மணி முதல்<br>இரவு 10.00 மணி வரை | | **திருப்புகழ்** மற்றும் **வேல்மாறல் பாராயணம்**<br>**முருகன் திருவருட் சங்கத்தினர்** |

## 19.11.2023 ஞாயிற்றுக்கிழமை

## 7. வீரமார்த்தாண்ட தேவர் நாள்

உரகதலம் முதலாய உம்பர்தலம் அத்தனையும்
உறுகண் நீங்கி, அரகரஎன் றேத்தெடுப்ப அசுரர்குலம்
நீறுபட அடல்வேல் வீசும், கரகமலக் கந்தவேட் கொரு
துணையாய்க் கண்ணுதலான் கருணை நோக்கால், மரகத
மின் அருள்**வீர மார்த்தாண்டன்** மலரடியை வணக்கம் செய்வாம்

- சேய்த்தொண்டர் புராணம்

| | | |
|---|---|---|
| காலை 06.30 மணி | | **சூர்ய நமஸ்காரம்** |
| காலை 07.30 மணி முதல்<br>பிற்பகல் 01.00 மணி வரை | | **கீதகாங்கேய காவ்யம்** என்னும்<br>**ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய அஷ்டபதி சிலவற்றுடன்**<br>**திருப்புகழில் ஸ்ரீ தேவசேனா வள்ளி கல்யாணம்**<br>**ஸ்ரீ பாண்டுரங்க பஜனை மண்டலியினர்** மற்றும்<br>**முருகன் திருவருட் சங்கத்தினர்** |
| மாலை 04.00 மணி முதல்<br>மாலை 05.15 மணி வரை | | வில்லிவாக்கம் **ஸ்ரீ S. ரகுராமன் குழுவினர், வயலின் இசை**, சென்னை-600 049 |

---

மனம், வாக்கு, காயமாகிய மூன்றும் ஒரு வழிபட்டு நிற்க, அன்பானது உடலை விட்டு நீங்காத வண்ணம், உனது அழிவற்ற திருவடித் தாமரைகளை நினைந்து, சிந்தித்து, அந்த திருவடிக்கமலங்களை பார்ப்பதற்கு விரும்பி தவம் புரியும் சிவயோகிகளைப் போல, நான் விளங்கும்படித் திருவருள்புரிவீர்.

வாசம் மிகுந்த கடம்பமென் கிண்கிணி
மாலைகரம் கொளும் அன்பர் வந்து அன்பொடு
வாழ நிதம் புனையும் பதம்தந்து உன(து) அருள்தாராய்

(காதடருங்கயல்-திருப்பரங்குன்றம்-திருப்புகழ்)

---

| | | |
|---|---|---|
| மாலை | 05.20 மணி முதல் | **குமாரிகள் ஜனக நந்தினி** |
| மாலை | 06.25 மணி வரை | **கீர்த்தி ராணி குழுவினர்** |
| | | இராமாபுரம், சென்னை-600 089 |
| | | **திருப்புகழ், பக்திப் பாடல்கள் இன்னிசை** |
| மாலை | 06.30 மணி முதல் | **சொற்பொழிவு ஸ்கந்த புராணத்தில்** |
| இரவு | 08.30 மணி வரை | **சரித்திர ஸம்பவங்கள்** |
| | | **வேத சூடாமணி, ஸலக்ஷண வித்வான்** |
| | | **ப்ரும்ம ஸ்ரீ இரா. ஸ்ரீ கிருஷ்ண கனபாடிகள்** |
| | | ஆசிரியர்: **வைதீகஸ்ரீ** (S/o. ஸ்ரீ V. Rajagopalan) |

## 20.11.2023 திங்கட்கிழமை

## விடைாற்றி உற்சவம்
## 8. வீராந்தகத் தேவர் நாள்

மத்துறுதண் தயிர்போலும் அலமந்த வானவர்தம்
வருத்தம் தீரச், சத்துருசங் காரவடி வேல்எறிந்த சண்
முகற்கோர் துணைவன் ஆகப், பத்தர் உளங் களிகூரக்
கருணைமழை பொழிந்துவரும் பரமன் நோக்கால்,
வித்துருமத் தவள் அருள்**வீ ராந்தகன்** தாள் வணங்கிவரு
வினையை வெல்வாம்.

- சேய்த்தொண்டர் புராணம்

| | | |
|---|---|---|
| காலை | 08.00 மணி முதல் | **திருப்புகழ் இன்னிசை** |
| காலை | 10.00 மணி வரை | **ஸ்ரீ லக்ஷ்மி நாராயணன் .V** A.M.I.E. M.S., குழுவினர் |
| | | **முருகன் திருவருட் சங்கம்** |

---

வாசனை மிகுந்த மெல்லிய கடப்ப மலரால் தொடுத்த அந்த கிண்கிணி மாலைகளைக் கரத்தில் ஏந்தி முத்தி உலகில் நிரந்தரமாக வாழும் பொருட்டு அடியார்களுக்குச் சூட்டுகின்ற திருவடியை அடியேனுக்குத் தந்து உனது திருவருளைத் தந்து அருள்வாய்.

திருப்புகழை உரைப்பவர்கள் படிப்பவர்கள் மிடிப் பகைமை
செயித்து அருளு(ம்) இசைப் பிரிய
திருத்த மாதவர் புகழ் குருநாதா

(கருப்புவில் பழநித் திருப்புகழ்)

| | | |
|---|---|---|
| காலை 10.05 மணி முதல்<br>பிற்பகல் 12.05 மணி வரை | **'செந்திலாண்டவர்' (A Thematic Concert)**<br>**ஸ்ரீமதி ரஞ்சனி கௌசிக் C.A., இன்னிசை**<br>**ஸ்ரீலக்ஷ்மி - வயலின்**<br>**ஸ்ரீ மணிகண்டன் A.V - மிருதங்கம்** |
| பிற்பகல் 12.10 மணி முதல்<br>பிற்பகல் 02.10 மணி வரை | **திருப்புகழ் இன்னிசை**<br>**ஸ்ரீ K.S. சந்த்ரசேகர் (முருகாஶ்ரமம்)**<br>**குழுவினர்** |
| பிற்பகல் 02.15 மணி முதல்<br>மாலை 04.15 மணி வரை | **திருப்புகழ் பக்திப் பாடல்கள் - இன்னிசை**<br>**குமாரி வைஷ்ணவி லக்ஷ்மி நாராயணன்**<br>**குழுவினர்** |
| மாலை 04.20 மணி முதல்<br>மாலை 06.20 மணி வரை | **திருப்புகழ் இன்னிசை**<br>**திருமதி. சிவப்ரியா**<br>**ஸ்ரீமதி பிரித்வ்யா சிவராமன் - வயலின்**<br>**ஸ்ரீ B. ஸத்ய வாகீஸ்வரன் - மிருதங்கம்** |
| மாலை 06.25 மணி முதல்<br>இரவு 08.25 மணி வரை | **திருப்புகழ் இன்னிசை**<br>**ஸ்ரீமதி பவ்யா ஹரிசங்கர் இன்னிசை**<br>**ஸ்ரீ ஆதித்யா ஸ்ரீராம் - வயலின்**<br>**ஸ்ரீ B. ஸத்யவாகீஸ்வரன் - மிருதங்கம்** |

திருப்புகழை எடுத்துக் கூறி அதற்கு விரிவுரை பகர்கின்றவர்களுக்கும், ஓதுகின்றவர்களுக்கும், வறுமையையும், பகைமையையும் தொலைத்து வெற்றி தந்தருளும் இசைப்பிரியனே! திருந்திய ஒழுக்கமுள்ள சிறந்த தவத்தினர்கள் புகழ்கின்ற குருநாதரே!

வெளிப்பட எனக்குஇனி இராவோடு பகல்அற
திரு பதியப் புகழ் அமுது இயல் கவிசொலி
விதித்தன் எழுத்தினை தரவரும் ஒரு பொருள் அருளாயோ

(முகத்தை - திருத்தணித் திருப்புகழ்)

## 21.11.2023 செவ்வாய்க்கிழமை

### 9. வீர தீரத் தேவர் நாள்

பொய்ஞ்ஞீதங் குடிகொண்ட அடல் அசுரர் பொடி
யாகப் புலவர் வாழ, மெய்ஞ்ஞீதம் நடனமிட
வேலெறிந்த விடலைக்கோர் துணைவன்ஆக, மைஞ்ஞீல
கண்டத்து மகதேவர் திருவருளால் மழை மிழற்றும்,
பைஞ்ஞீல மடமின் அருள் **வீரதீ ரன்**கழலைப் பணிந்து வாழ்வாம்

- சேய்த்தொண்டர் புராணம்

| | | |
|---|---|---|
| காலை | 08.00 மணி முதல் | **திருப்புகழ் பக்திப் பாடல்கள் - இன்னிசை** |
| காலை | 10.00 மணி வரை | **ஸ்ரீ கார்த்திக் கணேஷ்ராமன்** |
| | | **ஸ்ரீ ஸ்ரீவத்ஸன் - ஹார்மோனியம்** |
| | | **ஸ்ரீ ஸுதர்ஸன் - மிருதங்கம்** |
| காலை | 10.05 மணி முதல் | **குன்னக்குடி ஸ்ரீ M. பாலமுரளீகிருஷ்ணா இன்னிசை** |
| பகல் | 12.05 மணி வரை | **கண்டதேவி ஸ்ரீ விஜயராகவன் - வயலின்** |
| | | **ஸ்ரீ துத் பிள்ளை - மிருதங்கம்** |
| பகல் | 12.10 மணி முதல் | **தேவார இன்னிசை** |
| | | **திருவாசகச் செந்நாவலர்,** மயிலை |
| பகல் | 02.10 மணி வரை | **ஸ்ரீப. சற்குருநாத ஓதுவார்** அவர்கள் |
| | | **ஸ்ரீ M.S.G. ஸுரேஷ் - வயலின்** |
| | | **ஸ்ரீ மாதேஸ்வரன் - மிருதங்கம்** |

அடியேன் முன் தோன்றி, இரவு, பகல் என்ற வேற்றுமை அற்றுப் போக, தெய்வத்தன்மை என்பால் பொருந்த உனது திருப்புகழை அமுதுபோல் பாடி பிரமன் எழுதிய தலையெழுத்து மெலிந்து அழிய, ஒப்பற்ற உண்மைப் பொருளை அடியேனுக்கு உபதேசித்து அருள்வீராக.

ஸ்ரீ குமர சரண் என்று கூதளப்
புதுமலர் சொரிந்து கோமளப்
பதயுகள புண்டரீக(ம்) உற்று உணர்வேனோ

(கறைபடு - சுவாமிமலைத் - திருப்புகழ்)

| | | |
|---|---|---|
| மாலை | 02.15 மணி முதல் | **திருப்புகழ் இன்னிசை** |
| மாலை | 04.15 மணி வரை | **ஸ்ரீமதி சியாமளா (திருப்புகழ் மாமி) குழுவினர்** |
| மாலை | 04.20 மணி முதல் | **விழா நிறைவு இசை** |
| மாலை | 04.30 மணி வரை | **முருகன் திருவருட் சங்கத்தினர்** |



## சங்கத்தின் போஷகர்கள்

| | |
|---|---|
| **ஸ்ரீ அனந்தகிருஷ்ணன் N.** | பங்களூரு, கர்நாடகா - 560 066 |
| **ஸ்ரீ வேங்கடராமன் V.** | அரும்பாக்கம், சென்னை - 600 106. |
| **ஸ்ரீ சந்த்ரமௌலி P.** | மந்தைவெளி, சென்னை - 600 028. |
| **ஸ்ரீ முருகா ரமணி R.** | தியாகராயநகர், சென்னை - 600 017. |
| **ஸ்ரீ பாலசந்திரன் K.N.** | மேற்கு மாம்பலம், சென்னை-600 033 |
| **ஸ்ரீ ஸ்ரீநிவாஸ ஸ்வாமிநாதன் V.** | நங்கைநல்லூர், சென்னை - 600 061 |
| **ஸ்ரீ கடம்பவன ஸுந்தரம் N.** | காஞ்சிபுரம், தமிழ்நாடு - 631 501 |

ஸ்ரீ குமர சரணம் என்று கூறிக் கூதள (சங்கு புஷ்பம்) செடியின் புது மலர்களைக் கொண்டு உனது திருவடியில் அர்ச்சித்து, அழகிய திருவடித் தாமரைகளைச் சிந்தித்து, அத்திருவடி இன்பத்தினை அறிந்து உய்வு பெறுவேனோ?

சதுர்ஆய் உனது தாளிணைத் தொழ
அறியாத நிர்மூடனை நின்புகழ்
தனை ஓதி மெய்ஞ்ஞானம் உறச்செய்வ(து) ஒருநாளே

(கருவாகியே - பழமுதிர்ச்சோலைத் - திருப்புகழ்)

**தலைவர் :**

**ஸ்ரீ கணேசன் V.** அபிராமபுரம், சென்னை - 600 018.

**உப தலைவர் :**

**ஸ்ரீ ஸுப்ரஹ்மணியன் K.V.** பெசன்ட் நகர், சென்னை - 600 090.

**செயலாளர் :**

**ஸ்ரீ சந்த்ரசேகர் N.** கோபாலபுரம், சென்னை - 600 086

**பொருளாளர் :**

**ஸ்ரீ நாராயணன் V.P.** மயிலை, சென்னை - 600 004.

**இணைச் செயலாளர்கள் :**


**ஸ்ரீ ஸ்ரீதர் சுந்தரம்** மயிலை, சென்னை - 600 004.
**ஸ்ரீ ஜானகிராமன் V.** நுங்கம்பாக்கம், சென்னை - 600 034.

**செயற்குழு உறுப்பினர்கள் :**

**ஸ்ரீ லக்ஷ்மி நாராயணன் V.** பள்ளிக்கரணை, சென்னை - 600 100
**ஸ்ரீ இராமமூர்த்தி V.** மடிப்பாக்கம், சென்னை - 600 091
**ஸ்ரீ விச்வநாதன் N. (Jr.)** அபிராமபுரம், சென்னை - 600 018
**ஸ்ரீ ஸ்ரீதரன் S.** மந்தைவெளி, சென்னை - 600 028
**ஸ்ரீ கணேஷ்ராமன் M.** வடபழநி, சென்னை - 600 026
**ஸ்ரீ மோகன் S.** அபிராமபுரம், சென்னை - 600 018
**ஸ்ரீ ஸுப்ரஹ்மணியன் S.** தியாகராயநகர், சென்னை - 600 017
**ஸ்ரீ ரெங்கநாதன் K.** முகலிவாக்கம், சென்னை - 600 125
**ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி S.** இராமாபுரம், சென்னை - 600 089

உன்னை நினையாத சாமர்த்தியம் உடையவனாய், உன் இரு திருவடிகளை, தொழுவதற்கு அறியாத முழு மூடனாகிய என்னை உனது புகழை ஓதி உண்மை ஞானத்தைப் பெறச் செய்யும் நாள் ஒன்று எனக்கு உண்டாகுமோ?

உரைத்த நடை தளரும் உடம்பு
பழுத்திடு முன் மிகவும் விரும்பி
உனக்கு அடிமை படும் அவர் தொண்டு புரிவேனோ?
(கறுத்ததலை - திருவேங்கடம் - திருப்புகழ்)



பலத்த நடை தளர்ந்தும் தடி ஊன்றியும் உடம்பு முதுமைப் பருவத்தை அடைவதற்கு முன்னர் உமது திருத்தொண்டர்களுக்கு அடியேன் மிக்க அன்புடன் தொண்டு செய்ய மாட்டேனா?